திரு. சி. கோவிந்தராசன் : இப்படி ஒரு 'சாலைப் போக்கு வரத்து வாரியம்' ஏற்படுத்த வேண்டுமென்று நீதிபதி சோமசுந்தரம் கமிஷன் ஏதாவது ஆலோசனை கூறியிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தனிக் கேள்வி கேட்டால் நல்லது. ஏற்கனவே 10, 12 குழுக்கள் இருக்கின்றன. பற்பல பெயர்கள் இருக்கின்றன. இப்போது கேள்வி கேட்கப்பட்டிருப்பது, 'ரோடு டிராஃபிக் கமிட்டி' என்பது பற்றியது. ஏற்கனவே 'ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டி' என்று 34 பேர்களைக் கொண்ட ஒரு கமிட்டி இருக்கிறது. அது தவிர, "ஸ்டேட் ரோடு டெவலப்மெண்ட் அண்ட் டிராஃபிக் ப்ளானிங் கமிட்டி" என்று 11 பேர்களைக் கொண்ட ஒரு கமிட்டி இருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கமிட்டிகள் இருக்கின்றன. இவ்வாறு பல கமிட்டிகள் இருப்பதால் இன்னும் ஒரு 'ரோடு டிராபிக் கமிட்டி' தேவை இல்லை என்று கருதப்பட்டது.

திரு. கே. விநாயகம் : நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் கொடுத்த அறிக்கையில் இதுமாதிரி 'ரோடு டிராபிக் போர்ட்' ஆக வைத்தால் அதிலிருந்து அரசாங்கத்திற்கு அன்றாடத் தகவல்கள் நன்றாகக் கிடைக்கும், இம்மாதிரி செய்வதற்கு அனுகூலமாகயிருக்கும் என்று யோசனை சொல்லியிருக்கிறார்கள். அதை அமைச்சர் அவர்கள் படித்துப் பார்த்தார்களா ? இல்லையா ? சென்னையில் முன்பெல்லாம் 'ஸிட்டி டிரான்ஸ்போர்ட் அட்வைஸரி கமிட்டி' என்று ஒன்று இருந்ததே, அதை ஏன் இப்போது ரத்து செய்து விட்டீர்கள் ? அதைத் திரும்பவும் அமைக்க மந்திரி அவர்களுக்கு ஆலோசனை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : 'ஸிட்டி ரோடு டெவலப் மென்ட் அன்ட் ப்ளானிங் கமிட்டி' என்றிருக்கிறது. அது தவிர தனியாக வேறு கமிட்டிகள் சில போடுவதற்கு அரசு ஆராய்ந்து கொண்டு இருக்கிறது.

Madras-Bangalore Bus Service

* 262 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Co-operation be pleased to state :

(*a*) whereas it is proposed to ply more State Transport buses from Madras to Bangalore, via Krishnagiri and Hosur Towns in view of the increasing traffic; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : On the 27th November 1968, a meeting was held between the then Transport Minister of Tamil Nadu (the present Chief Minister) and the Transport Minister of Mysore State. In that meeting, certain decisions were taken. I am taking both questions 262 and 263 together.